# திருக்குறள் கூறும் வாழ்க்கைஅறமும் வாழ்க்கை முறையும்

**முனைவர் வா. விஜயலட்சுமி**
*உதவிப்பேராசிரியர் (தமிழ்த்துறை)*
*தியாகராசர் கல்வியியல் கல்லூரி*
*(அரசு உதவி பெறும் கல்லூரி), மதுரை*
**DOI:** https://doi.org/10.34293/eduspectra.v6i2.12

**முன்னுரை**

உலக அற இலக்கிய நூல்களில் முதன்மையானது திருக்குறளாகும். இது மக்கள் வாழ்வியல் நூலாகும். தமிழகம் செய்ததவப்பயனாகப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய தெய்வப் புலவர், செந்நாபோதகர், பொய்யில் புலவன், அய்யன் திருவள்ளுவன் வகுத்த முப்பாலில் வாழ்க்கை நெறிகளையும், வாழும் முறைகளையும் தமிழர்கள் கண்ட அறவாழ்க்கையை அறநெறியில் நின்று சமுதாயத்தில் வாழ்ந்து இன்பமும், வீடும் எய்தும் திறத்தை இரண்டேவரிகளில் சுருக்கமாக கூறியுள்ள வாழ்க்கைத் தத்துவத்தை இக்கட்டுரையில் காண்போம்.

இல்லறத்தை நல்லறமாக மேற்கொண்டு வாழும் கற்பியலாகிய இல்வாழ்க்கையை அறத்துப்பாலில் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியலில் மெய்றுதல், ஊழியியலிலும் கொடுத்துள்ளார். பொருட்பாலில் அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியலும் வைத்துள்ளார். காமத்துப்பாலில் களவியல், கற்பியல் என முறையே அமைத்துள்ளார். வாழ்க்கை பிறர் கொடுப்பவும் எடுப்பவும் இன்றி ஊழி வயத்தால் தொடங்கிப் பின் அரும்பி வளர்ந்து பூத்துக் காய்ந்து ஈற்றில் அருட்பேறாகிய வீட்டின் பத்தில் பழுத்துப் பயன் பெறுவதே அற வாழ்க்கையாகும்.

**இல்வாழ்க்கைகளவில் தொடங்குகிறது**

இனிமுத்தமிழ் காட்டும் வாழ்வியல் வழியாகமுப்பால் காட்டும் வாழ்க்கை நெறிகளைக் காண்போம். வாழ்க்கைக்கு அடிப்படை இல்வாழ்க்கை. இல்வாழ்க்கை இல்லத்திலேயே தொடங்குகிறது. இல்லறநெறி வாழ்க்கையின் உயர்நிலையாகிய அன்பு நெறியில் தொடங்கி உலகம் முழுவதையும் வளைக்கும் மனத்துக்கண் மாசில்லாத மனத்துறவரத்தில் விளையும் அருள் நெறியிலான பேரின்பத்தில் வாழ்க்கை முடிகிறது.

**இயற்கையை போற்றுதல்**

தமிழர்கள் எந்த ஒரு செயலையும் தொடங்கும் முன்பு புலவர்கள் இலக்கியங்களையும், காவியத்தையும் படைக்க தொடங்குவதற்கு முன்பு இறைவனையும், இயற்கையையும் வணங்கி வாழ்த்திவிட்டு தொடங்குவது காப்பிய மரபு என்பதால் அவ்வாறே தொடங்கி படைத்துள்ளார்கள் என்பதற்கு சான்று சிலப்பதிகாரத்தில் புகார் காண்டத்தில் மங்கல வாழ்த்துப்பாடலில் காணலாம்.

**“திங்களைப் போற்றுதும் திங்களைப்போற்றுதும்**
**கொங்குஅலர் தார்ச் சென்னிகுளிர் வெண்குடைபோன்று இவ்**
**அம் கண் உலகுஅளித்தலான்.”**
**“ஞாயிறுபோற்றுதும் ஞாயிறுபோற்றுதும்**
**காவிரிநாடன் திகிரிபோல் பொன் கோட்டு**
**மேருவலம் திரிதலான்.”**
**மாமழைபோற்றுதும் மாமழைபோற்றுதும்**
**நாமநீர் வேலிஉலகிற்குஅவன் அளிபோல்**

**மேலநின்றுதான் சுரத்தலான்." ( சிலம்பு)**

திருவள்ளுவரும் முதலில் இறையாண்மையை வைத்துள்ளார். நீரின்றி அமையாது உலகு என்பதால் வான் சிறப்பை அடுத்து வைத்துள்ளார். அறவழியில் நிலைத்து நிற்பதே நீத்தார் பெருமையாகும். அறத்தை வலியுறுத்தி அறத்தோடு வாழகளவு செய்து கற்போடு இல்வாழ்க்கை அமைத்து இல்லாள் துணையோடு மக்கட்பேரு பெற்று அன்பு, அடக்கம் ஒழுக்கத்தோடு கல்வி பெற்று கல்லாமையை நீக்கி அறிவு பெற்று நட்புக்கொண்டு புகழோடு வாழ்ந்து நிலையாமையை உணர்ந்துதவம் செய்து துறவு நிலையை அடைந்து மெய்யுணர்தலே வள்ளுவர் கூறும் வாழ்க்கை நெறியாகும். இவற்றை உணர்த்தும் வகையில் எடுத்துக்காட்டுகளுக்காக ஒரு சில குறப்பாட்களை காண்போம்.

**இறை**

**"பொறிவாயில் ஐந்துஅவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார் (குறள் - 6)**

ஐம்பொறி வாயிலாக பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர் நிலைபெற்ற நல்வாழ்க்கை வாழ்வார்.

**வான் சிறப்பு**

**நெடுங்கடலும் தன்நீாமைகுன்றும் தடிந்து எழிலி**
**தான்நல்காதுஆகிவிடின்"(குறள் -17)**

மேகமானது கடல் நீரை முகந்து சென்று மீண்டும் மழையாகப் பெய்யாவிட்டால் அப்பெரிய கடலும் தன் வளமையில் குறைந்து போகும்.

**நீத்தார் பெருமை**

**"துறந்தார் பெருமைதுணைக்கூறின் வையத்து**
**மறத்தலின் ஊங்கு இல்லைகேடு"(குறள்- 22)**

பற்றுகளைவிட்டவரின் பெருமையை அளந்து சொல்வதானால் உலகில் இதுவரை இறந்தவர்களைக் கணக்கெடுத்தாற் போன்றதாகும்

**அறன் வழியுறுத்தல்**

**"அறத்தின் ஊங்குஆக்கமும் இல்லைஅதனை**
**மறத்தலின் ஊங்கு இல்லைகேடு"(குறள்- 32)**

அறநெறியோடு வாழ்வதைக் காட்டிலும் உயிர்க்கு நன்மையானதும் இல்லை அறநெறியைப் போற்றாமல் மறத்தலைக் காட்டிலும் கேடானதும் இல்லை.

**களவு**

**"யான்நோக்கும் காலைநிலன˙நோக்கும் நோக்காக்கால்**
**தான்நோக்கி மெல்ல நகும்"(குறள்-1094 )**

யான் நோக்கும் போது அவள் நிலத்தை நோக்குவாள் யான் நோக்காத போது அவள் என்னை நோக்கி மெல்லத் தனக்குள் மகிழ்வாள்.

**கற்பு**

**"ஊடற்கண் சென்றேன்மன் தோழிஅதுமறந்து**
**கூடற்கண் சென்றதுஎன் மனம்"(குறள்- 1284)**

தோழி ஊடற்கண் சென்றேன் காதலரைக் காணாமுன் அவர் செய்ததவறைத் தன்னோடு நினைத்துயான் அவரோடு ஊடுதற் கண்ணே சென்றேன். என் நெஞ்சு அதனை மறந்து கூடலைக் கண்ணே சென்றது.

**இல்வாழ்க்கை**

**"இயல்பினான் இல்வாழ்க்கைவாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை" (குறள்- 47)**

அறத்தின் இயல்பொடு இல்வாழ்க்கை வாழ்கிறவன் வாழ முயல்கிறவன் பல திறத்தாரிலும் மேம்பட்டு விளங்குகிறவன் ஆவான்.

**வாழ்க்கைத்துணை நலம்**

**"தற்காத்துக் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்"(குறள்- 56)**

கற்புநெறியில் தன்னையும் காத்தக் கொண்டு தன் கணவனையும் காப்பாற்றி தகுதியமைந்த புகழையும் காத்து உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண்.

**மக்கட்பேறு**

**பெறுமவற்றுள் யாம்அறிந்து இல்லைஅறிவறிந்த**
**மக்கட்பேறு அல்லபிற"(குறள்- 61)**

பெறுமவற்றுள் ஒருவன் பெறும் பேறுகளுல் அறிவு அறிந்த மக்கட்பேறு அல்ல பிற அறிய வேண்டுவன அறிதற்குறிய மக்களைப் பெறுதல் அல்லது பிறபேறுகளையாம் அறிவது இல்லை.

**அன்புடைமை**

**"அன்பின் வழியது உயர்நிலை அ∴திலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு"(குறள்- 80)**

அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர் நின்ற உடம்பாகும் அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்த வெற்றுடம்பே ஆகும்.

**அடக்கம்**

**"ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து"(குறள்- 126)**

ஒரு பிறப்பில் ஆமை போல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால் அ∴து அவனுக்குப் பல பிறப்பிலும் காப்பாகும் சிறப்பு உடையது.

**ஒழுக்கம்**

**"அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று இல்லை**
**ஒழுக்கம் இலான்கண் உயர்வு"(குறள்- 135)**

பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் என்னும் நான்கிற்கும் ஒருசிறிதும் இடம் தராமல் ஒழுகி வருவதே அறம் ஆகும்.

**கல்வி**

**"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்**
**கடையரேகல்லாதவர்"(குறள்- 395)**

செல்வர் முன் வறியவர் நிற்பதுபோல் ஏங்கித் தாழ்ந்து நின்றும் கல்விக் கற்றவரே உயர்ந்தவர் கல்லாதவர் இழிந்தவர்.

**கல்லாமை**

**கல்லாதவன் சொல்காமுறுதல் முலைஇரண்டும்**
**இல்லாதாள் பெண்காமுற் றற்று" (குறள்- 402)**

கற்றவரின் அவையில் கல்லாதவன் ஒன்றைச் சொல்ல விரும்புதல் மார்பு இரண்டும் இல்லாதவள் பெண் தன்மையை விரும்பினாற் போன்றது.

**அறிவு**

**"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடையரேனும் இலர்" (குறள்-430 )**

அறிவுடையவர் வேறொன்றும் இல்லாதிருப்பினும் எல்லாம் உடையவரே ஆவார் அறிவில்லாதவர் வேறு என்ன உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரே ஆவார்.

**பண்பு**

**"பண்புஉடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்**
**மண்புக்குமாய்வது மண்"(குறள்-996 )**

பண்பு உடையவரிடத்தில் பொருந்தியிருப்பதால் உலகம் உள்ளதாய் இயங்குகின்றது. அ∴து இல்லையானால் மண்ணில் புகுந்து அழிந்துபோகும்.

**நட்பு**

**"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**
**மேற்சென்று இடித்தற் பொருட்டு"(குறள்- 784)**

நட்புச் செய்தல் ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழும் பொருட்டு அன்று நண்பா நெறிக்கடந்து செல்லும் போது முற்ப்பட்டுச் சென்று இடித்துரைப் பதற்காகும்.

**புகழ்**

**"நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்**
**போற்றாது புத்தேள் உலகு"(குறள்- 234)**

நிலவுலகின் எல்லையில் நெடுங்காலம் நிற்க வல்ல புகழைச் செய்தால் வானுலகம் அவ்வாறு புகழ் செய்தாரைப் போற்றுமே அல்லாமல் தேவரைப் போற்றாது.

**நிலையாமை**

**"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு"(குறள்- 339)**

இறப்பு எனப்படுவது ஒருவனுக்கு உறக்கம் வருதலைப் போன்றது. பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றது.

**துறவு**

**"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு"(குறள்- 350)**

பற்றில்லாதவனாகிய கடவுளுடையபற்றை மட்டும் பற்றிக் கொள்ள வேண்டும். உள்ள பற்றுகளைவிட்டொழிப்பதற்கே அப்பற்றைப் பற்ற வேண்டும்.

**தவம்**

**“தவஞ்செய்வார் தம்கருமஞ் செய்வார்மற் றல்லார்**
**அவஞ்செய்வார் ஆசையுட்பட்டு”(குறள்- 266)**

தவம் செய்கின்றவரே தமக்குரிய கடமையைச் செய்கின்றவர் ஆவார். அவர் அல்லாத மற்றவர் ஆசை வலையில் அகப்பட்டு வீண் முயற்சி செய்கின்றவரே.

**மெய்யுணர்தல்**

**“பிறப்புஎன்னும் பேதமைநீங்கச் சிறப்பு என்னும்**
**செம்பொருள் காண்பது அறிவு”(குறள்- 358)**

பிறவித் துன்பத்திற்குக் காரணமான அறியாமை நீங்குமாறு முத்தி என்னும் சிறந்த நிலைக்குக் காரணமான செம்பொருளைக் காண்பதே மெய்யுணர்வு.

**முடிவுரை**

வான் புகழ் கொண்ட தெய்வத் திருமறையாய் விளங்கும் தமிழ் மறையானத் திருக்குறள் எப்பாலவரும் இசைந்துப் போற்றும் முப்பால் நூலில் கூறப்பெற்ற நாற்பாலாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நெறியில் நின்று அறனறிந்து ஆன்ற பொருளறிந்து இன்பின் திறனறிந்து வீடு தெளிந்தோம்.

**“வள்ளுவன் குறளைவையமெல்லாம்**
**வாரி இறையடாதமிழா”**

**துணை நூல்கள்**

1. திரு. வி. கலியாணசுந்தரனார் உரை-1939
2. மு. வரதராசன் -1948
3. வ . சுப. மாணிக்கம் -
4. தமிழண்ணல்
5. க.ப.அறவாணன்
6. மு. கருணாநிதி
7. பரிமேலழகர்
8. சுகாத்தியர்
9. வ. உ. சிதம்பரனார் - 1935
10. சாலமன் பாப்பையா - 1995
11. மு.வ. தமிழ் இலக்கியவரலாறு